www.Padasalai.Net www.CBSEtips.in

FMK **முதல் இடைப் பருவத் தேர்வு - ஆகஸ்ட் 2022**

வகுப்பு - **10** சமூக அறிவியல்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

பகுதி - I

குறிப்பு: i) அனைத்து 7 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×1=7

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

சரியான விடையைத் தேர்வு செய்யவும்:

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்
2. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா..........ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
   அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் இ) இலங்கை ஈ) மாலத்தீவு
3. கூற்று : இமயமலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.
   காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு.
   இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.
4. நாட்டு வருமானம் அளவிடுவது
   அ) பணத்தின் மொத்த மதிப்பு
   ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
   இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
   ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
5. கீழ்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?
   அ) குடியரசு, ஜனநாயக, சமயச்சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.
   ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச்சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.
   இ) இறையாண்மை, குடியரசு, சமயச்சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.
   ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.
6. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைபிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
7. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்?
   அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
   இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

பகுதி - II

குறிப்பு: i) எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 5×2=10

ii) 14வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

8. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
10. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.
11. இந்தியாவின் நான்கு பருவகாலங்களைக் குறிப்பிடுக.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



12. அரசியலமைப்பு என்றால் என்ன?
13. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.
14. 'புலிகள் பாதுகாப்பு திட்டம்' என்றால் என்ன?

## பகுதி - III

குறிப்பு: i) எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். **5×5=25.**
ii) 21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15. கோடிட்ட இடங்களை நிரப்புக:
    i) பால்கனில் .................. நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது
    ii) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு .................. ஆகும்.
    iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் .................. ஆகும்.
    iv) இரண்டாம் துறையை வேறுவிதமான .................. துறை என அழைக்கலாம்.
    v) டானென்பர்க் போரில் .................. பேரிழப்புகளைச் சந்தித்தது
16. அ) வேறுபடுத்துக:
    i) இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்
    ii) வானிலை மற்றும் காலநிலை

    ஆ) காரணம் கூறுக:
    இந்தியா அயனமண்டல பருவகாற்றுக் காலநிலையைப் பெற்றுள்ளது.
17. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்சய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களைக் கோடிட்டுக் காட்டுக.
18. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
19. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
20. GDP-ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
21. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:
    1900 முதல் 1920 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் அமைத்திடுக.

    (அல்லது)

    உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்:
    1. கிரீஸ் 2. ஜெர்மனி 3. பிரான்ஸ் 4. இத்தாலி 5. பல்கேரியா

## பகுதி - IV

குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2×4=8**

22. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

    (அல்லது)

    பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
23. கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:
    அ) ஆரவல்லி மலைத்தொடர் ஆ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
    இ) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை ஈ) அதிக மழைபெறும் பகுதிகள்

    (அல்லது)

    கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:
    அ) கிழக்குத்தொடர்ச்சி மலை ஆ) ரான் ஆப் கட்ச்
    இ) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள் காணப்படும் பகுதி
    ஈ) குறைவான மழைபெறும் பகுதிகள்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593